## (ஏ) சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும்

பின்னிணைப்பு 11ல் உள்ள 27 தொடக்கம் 31 வரை உள்ள அட்டவணைகள் 1962ம் ஆண்டிற்கான இலங்கையின் சென்மதி நிலுவைக் கணக்குகளை (செலாவணிக்கட்டுப் பாட்டின் தரவுகளின்படி) காட்டுகின்றன.

1962க்குரிய மிகத்தற்காலிகமான மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கையின் வெளிநிலுவை இவ்வருடமும் தொடர்ந்து பிரதிகூலமாகவே இருந்தது. உண்மையில் 1961ம் ஆண்டினதோடு ஒப்பிடுகையில் 1962ம் ஆண்டின் வெளிக்கொடுப்பனவில் ஒரு சிறு சீர்குலைவு காணப்பட்டது. 1962ல் நடைமுறைக்கணக்கில் பதியப்பட்ட குறைவான ரூ. 1240 லட்சமானது, 1961இற்குரிய முறையான ரூ. 938 லட்சத்திலும் உயர்வாக இருப்பினும், 1958, 1959, 1960ம் ஆண்டுகளிலே முறையே ஏற்பட்ட குறைகளான ரூ. 1529 லட்சம், ரூ. 2080 லட்சம், ரூ. 2205 லட்சம் முதலியவற்றிலும் மேற்கூறிய குறை கணிசமான அளவில் தாழ்ந்திருக்கிறது.

### அட்டவணை II ஏ-1

### வணிகப்பொருள் கொடுக்கல் வாங்கல்கள் 1957-1962

*இலட்சம் ரூபாய்களில்*

| | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் (ஏற்றுமதி விலை) | 1,669 | 1,624 | 1,773 | 1,796 | 1,707 | 1,765 |
| இறக்குமதிகள் (கொ.கா.க.*) | 1,764 | 1,713 | 1,958 | 2,006 | 1,794 | 1,898 |
| நிலுவை .. .. | — 95 | — 89 | —185 | —210 | — 87 | —133 |

*இது இலங்கை அரசாங்கத்தினுல் பெறப்பட்ட ''பொருள்வடிவ'' நன்கொடைகளை (உம். ''கெயர்''பால், மா, இயந்திரங்கள்) முதலியனவற்றை உள்ளடக்கும். இவ்வகை நன்கொடைகள் கிட்டத்தட்ட முழுவனவும் சுங்கப்பதிவேடுகளின்படி பெற்ற இறக்குமதித் தரவுகளில் பிரதிபலிக்கப்படவில்லை. இவை 1960, 1961ம் ஆண்டுகளில் முறையே ரூ. 471 லட்சம், ரூ. 359 லட்சமாக விளங்கி, 1962ல் ரூ. 400 இலட்சமாக மதிப்பிடப்பட்டிருக்கின்றன.

சென்மதி நிலுவைக்குறையில் ஏற்பட்ட உயர்வானது 1961ம் ஆண்டின் ஏற்றுமதிப் பெறுமானத்தோடு ஒப்பிடும் போது 1962ம் ஆண்டில் அப்பெறுமானம் ரூ. 581 லட்சத்தால் அதிகரித்திருப்பினும், ஏற்பட்டிருக்கின்றது. கட்புலனுகாவற்றின் கணக்குகளின் நிலுவை 1961ல் ரூ. 74 லட்சக்குறைநிலை பெற்றிருந்து, 1962ல் அது ரூ. 88 லட்சம் மிகையாக விளங்கிற்று. ஆயினும் 1961ல் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்த இறக்குமதிகள் 1961ம் ஆண்டிற் கூடாக[1] ரூ. 1045 லட்சத்தால் அதிகரித்து 1962ன் வணிகப்பொருள் குறைநிலையை ரூ. 464 லட்சத்தால் அதிகரிக்க வைத்தன. இறக்குமதி தட்டுப்பாடுகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டும் இவ்வகையாக ஏற்பட்ட உயர்வுக்கு விளக்கம் தரவேண்டியதவசியமாகிறது.

1. 1962ம் ஆண்டில் இறக்குமதிகளின் ரூ. 430 லட்சம் வீழ்ச்சியைக்காட்டிய சுங்கப்பதிவேடுகளின்படி எதிர்ப்போக்கான முறையில் விளங்கிய இறக்குமதிகளின் நடத்தையை மூன்று காரணிகளைக் கொண்டு விளக்கலாம். முதலாவதாக சுங்கப்பதிவேடுகள் 1961ம் ஆண்டில் அரிசி, மா, சீனி இவற்றின் மொத்த இறக்குமதி ரூ. 410 லட்சத்தால் வீழ்ச்சியுற்றன எனக் காட்ட இதற்கெதிரான முறையில் இதே பொருட்களின் இறக்குமதிகளிற்குரிய கொடுப்பனவுகள் 1962ம் ஆண்டில் ரூ. 420 லட்சத்தால் அதிகரித்தன என காட்டியமை. இவ்வித்தியாசம் ஏற்பட்டதற்குரிய விளக்கங்களாவன:—முதலாவதாக சுங்கப்பதிவேடுகளில் பதிவு செய்வதில், இலங்கையை ஏற்கனவே அடைந்த இறக்குமதிகளைக்கூடப் பதிவுசெய்வதில் ஏற்படும் பரிபாலனத் தாமதங்கள். இரண்டாவதாக 1962ல் ஏற்கனவே கொடுப்பனவு செய்யப்பட்ட சில உணவுப்பொருட்களின் தாமதித்த வரவு என்பனவாம். இரண்டாவதாக சென்மதி நிலுவைத் தரவுகளின்படி ரூ. 450 லட்சம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டிய, ஏனைய அரசாங்க இறக்குமதிக் கொடுப்பனவுகளுக்கு எதிராக சுங்கப்பதிவேடுகள் அரசாங்க இறக்குமதிகள் ரூ. 120 லட்சத்தால் வீழ்ச்சியுற்றன எனக்காட்டின. இவ்வரசாங்க இறக்குமதிகள் சுங்கப்பதிவேடுகளில் ''இறக்குமதிகள், குடியியல், பாதுகாப்பு'' என வகுத்துக் காட்டப்படுகின்றன. மேற்கூறிய இரு சோடி புள்ளிவிபரங்களினது வித்தியாசத்திற்கும், அரசாங்க உணவு இறக்குமதிகள் சம்பந்தப்பட்ட அதே காரணிகளே பொறுப்பாகின்றன.

மூன்ருவதாகத் தனியார் இறக்குமதிகளைப் பொறுத்தமட்டில், அவற்றில் பெரும்பங்கு, பொருட்கள் இலங்கையில் பெறப்பட்டபின்பே, கொடுப்பனவு செய்யப்படுகின்றன. இவ்விதமாக ஏற்படும் கொடுப்பனவுகளின் தாமதத்தினுல், இறக்குமதிகளிலே வீழ்ச்சிப்போக்கு ஏற்படும் ஒரு காலத்திலே, கொடுப்பனவுத் தரவுகளின்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஏற்படும் வீழ்ச்சி குறைந்தே விளங்கும். கொடுப்பனவுகளில் சாதாரணமாக ஏற்படும் கால தாமதம் குறைந்தால், இறக்குமதிக் கொடுப்பனவுகளில் ஏற்படும் மொத்த வீழ்ச்சி மேலும் குறைவாகவே விளங்கும். இப்படியான ஒரு நிகழ்வு 1962ல்; மொத்த இறக்குமதிகளில் இருபுடைக்கணக்குகளின் மூலமாக ஏற்பட்ட இறக்குமதிகளின் விகிதம் அதிகரித்ததன் விளைவாக ஏற்பட்டது. இருபுடைக்கணக்குகள் மூலமாக இறக்குமதி செய்த பொழுது ''கொடுப்பனவு'' அதாவது கணக்குகளில் பதியப்படும் ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கான வரவு, பொருட்கள் ஏற்றுமதியாளரால் கப்பலில் ஏற்றப்பட்டவுடன் செய்யப்படுகின்றது. இதன் கருத்தென்னவெனில் கொடுப்பனவுகளில் ஏற்படும் வழமையான காலதாமதம் தலைகீழான முறையில் அமைகிறது. அதாவது இறக்குமதிக் கொடுப்பனவுகள், பொருட்கள் இலங்கையை வந்தடையுமுன்பே செய்யப்பட்டுவிடுகின்றன.

சென்மதிநிலுவைத் தரவுகளின்படி, இறக்குமதி கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது இறக்குமதி கட்டுப்பாட்டின்கீழ் அமையாத அரசாங்க இறக்குமதிகளான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் முதல், மற்றும் வேறு பொருட்களிலேயே ஏற்பட்டதாம். உணவுப்பொருட்களுக்கும் பிரதானமாக அரிசிக்கும் அளிக்கப்பட்ட கூடிய கொடுப்பனவுகள், கொடுப்பனவு செய்யப்பட்ட அரிசியின் அளவு கூடியதாலும் பர்மா, மற்றும் சீன போன்றவற்றிெடு வரையப்பட்ட இருபுடை வர்த்தக ஒப்பந்தங்களுக்குக் கீழ் அன்றி அப்பால் சென்று கூடியளவில் கொள்வனவு செய்ததினுலுமே தோன்றின. 1961இலும் 1962லும் கொடுப்பனவு செய்யப்பட்ட அரிசியின் அளவு முறையே 419,000 தொன்களாகவும், 524,000 தொன்களாகவும் அமைந்தன. மா இறக்குமதி அளவு பொறுத்தமட்டில் அவை முறையே 177,000 தொன்களாகவும், 207,000 தொன்களாகவும் இருந்தன. வர்த்தக வங்கிகள் மூலமாகவும், விசேட கணக்கு வசதிகள் மூலமாகவும் நிதியீட்டப்படும் தனியார்துறை இறக்குமதிக் கொடுப்பனவுகள், குறைந்திருப்பினும் கணிசமான அளவிற் குறையவில்லை.

1962ல் ஒப்பியல்பானவிதத்தில் தனியார் இறக்குமதிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பற்றி சிறிது கூறவேண்டியிருக்கிறது. 1962ல் முக்கியமான புதிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும், உயர்வான இறக்குமதித்தீர்வைகளும் அவ்வாண்டில் தாமதித்தே அதாவது ஆடியிலிருந்து ஐப்பசி மட்டுமே புகுத்தப்பட்டன. 1962 ஆடிக்கு முன்னர் (அளவுக்கட்டுப்பாடு வடிவத்திலும், உயர்ந்த தீர்வைகள் வடிவத்திலும் விதிக்கப்பட்ட) இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் முக்கியமான பாகம் 1960லும், 1961ம் ஆண்டு ஆரம்பத்திலுமே விதிக்கப்பட்டன. எனவே முன்னரே எடுக்கப்பட்ட இவ்விறக்குமதி நடவடிக்கைகளின் முழுத்தாக்கமும், 1960இலும் பார்க்க 1962இலேயே இறக்குமதிக் கொடுப்பனவுகளின் கணிசமான வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. 1962ம் ஆண்டு இறக்குமதிக் கட்டுப்பாடுகளும், குறிப்பாக 1962 ஐப்பசி மாதத்துக் கட்டுப்பாடுகளும் அவ்வாண்டில் காலம் தாழ்த்தி விதிக்கப்பட்டதால் அவ்வருடத்துக்குள் அமைந்த இறக்குமதி கொடுப்பனவுகளை, அவை அவ்வளவாகத் தாக்கவில்லை. 1962ம் ஆண்டுக் கட்டுப்பாடுகளிற்கு முன்னராக வரத்தில் நின்றனவும், 1962க் கட்டுப்பாடுகளின் முன்னராக நிறுவனங்களால் ஆடர்செய்யப்பட்டதுமான, இறக்குமதிகளிற்குரிய கொடுப்பனவுகள், இவ்வருடத்து முடிவு மாதங்களில் தொடர்ந்து செய்யப்பட்டன.

1961ல் இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 96 லட்சம் சிறு வீழ்ச்சியோடு ஒப்பிடுகையில் அவை 1962இல் ரூ. 278 லட்சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கின்றன. இவ்வொதுக்குநிதிகளில் கூடுதலாக ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 1962இன் கூடுதலான நடைமுறைக் குறையே முக்கிய காரணியாக விளங்கிற்று. 1961ம் ஆண்டிற் போலவே வெளிநாட்டு ஒதுக்குநிதிகளின் உபயோகத்தை மட்டுப்படுத்த, வெளிநாட்டுக் கடன்கள் மூலம் கிடைத்த அதிகரித்த வரவுகளும், குறிப்பாக சர்வதேச நாணயநிதியிலிருந்து எடுக்கப்பட்ட 538 லட்ச ரூபாய்களுமே உதவின.

**கட்புலனுகாக்கணக்கு**

பின்தொடரும் அட்டவணையில் காட்டியுள்ளபடி, 1962ம் ஆண்டின் நடைமுறைக் கட்புலனுகாக் கணக்கு 1961ல் காட்டிய ரூ. 74 லட்சம் குறைக்கெதிராக 1962இல் ரூ. 88 லட்சம் மிகையைக் காட்டியுள்ளது. இச்சீர் திருத்தம் பிரதானமாக 1961ல் இலங்கை அரசாங்கச் செலவுகள் பகுதியில் ஏற்பட்ட குறையானது ,1962இல் மிகையாக மாறியதாலேயே ஏற்பட்ட தொன்றாகும். அரசாங்கக் கணக்கின் பேரில் ஏற்பட்ட மொத்த வரவுகள்

ரூ. 92 லட்சத்தால் அதிகரித்தமை முற்றிலும், 1962இல் வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் செலவுகள் கூடியமையாலேயே ஏற்பட்டது. வெளி நாட்டுப் பிரயாணத்தின் பேரிலும், ஏனைய கொடுப்பனவுகள் பேரிலும் (விளம்பரம், ஏற்றுமதி வட்டி வருமானங்கள், தூதுக்காரியாலய, தலைமைக் காரியாலயச் செலவுகள் போன்றவற்றிற்கு) ஏற்பட்ட குறை 1961ம் ஆண்டி லும் பார்க்க 1962ம் ஆண்டில் குறைவாக இருந்தது. முதலீட்டு வருமானத் தின் பேரில் ஏற்பட்ட குறை 1962ம் ஆண்டில் சிறிதளவு அதிகரித்தது. ரூ. 31 லட்சத்தால் முதலீட்டு வருமானக்குறையில் ஏற்பட்ட சிறு அதி கரிப்பு, இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் பேரில் ஏற்பட்ட குறைந்த உழைப்புக்களினாலேயே பிரதானமாக ஏற்பட்டது.

### அட்டவணை II ஏ-2

### நடைமுறைக் கட்புலனாகாக் கணக்கு 1961, 1962

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961 | | நிகர | 1962(அ) | | நிகர |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | | வரவு | பற்று | |
| **சேவைகள்** .. .. .. | **221·7** | **240·0** | **—18·3** | **230·0** | **232·1** | **— 2·1** |
| நாணயத்திற்கு அல்லாத தங்கம் (நிகர) .. .. .. | — | 1·9 | — 1·9 | — | 1·9 | — 1·9 |
| வெளிநாட்டுப்பிரயாணம் .. | 7·6 | 25·3 | —17·7 | 5·3 | 19·5 | —14·2 |
| ஏற்றியிறக்கலும், காப்புறுதியும் | 118·6 | 45·3 | +73·3 | 121·5 | 48·4 | +73·1 |
| முதலீட்டு வருமானம் .. | 21·8 | 61·7 | —39·9 | 19·4 | 62·4 | —43·0 |
| அரசாங்கச் செலவுகள் .. | 27·3 | 36·5 | — 9·2 | 36·5 | 35·2 | + 1·3 |
| ஏனையவை .. .. | 46·4 | 69·3 | —22·9 | 47·3 | 64·7 | —17·4 |
| **நன்கொடைகள்** .. .. | **48·8** | **37·9** | **+10·9** | **47·4** | **36·5** | **+10·9** |
| தனிப்பட்டோர் அனுப்பியவையும் குடிபெயர்வோர் மாற்றங்களும் | 8·2 | 37·9 | —29·7 | 6·7 | 36·5 | —29·8 |
| அரசகரும நன்கொடைகள் .. | 40·6 | — | +40·6 | 40·7 | — | +40·7 |
| மொத்தம் .. .. | 270·5 | 277·9 | — 7·4 | 277·4 | 268·6 | + 8·8 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மகா வங்கி.

### தனிப்பட்டோர் மூலதன நடமாட்டங்கள்

1962ம் ஆண்டில் மூலதனக் கணக்கின் பேரில் ஏற்பட்ட நிகர வெளி யேற்றம் ரூ. 60 லட்சமாகும். 1961ல் அது ரூ. 61 லட்சமாக இருந்தது. நேரடி முதலீட்டின் பேரில் ஏற்பட்ட 1962ம் ஆண்டிற்குரிய நிகர வெளி யேற்றமான ரூ. 7 லட்சமானது, 1961ம் ஆண்டினது ரூ. 78 லட்சத்திலும் சிறிதாக உள்ளது. மறுபுறத்தில் விசேட கணக்கு வசதிகளைப்† படைத்த தொழில் நிருவனங்களினது நிலுவைகளில் ஏற்படும் நடமாட்டங்களை முக்கிய மாகப் பிரதிபலிப்பவையான குறுகிய கால மூலதன நடமாட்டங்கள் 1961இல் காட்டிய நிகர வரவாகிய ரூ. 139 லட்சத்திற்கெதிராக 1962ல் ரூ. 53 லட்சம் நிகர வெளியேற்றத்தைக் காட்டின.

†இவ்வசதிகளின் கீழ் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்கள், செலாவணிக்கட்டுப்பாட்டின் கீழ் ஸ்டேர்லிங் கூட்டு நிலையங்களும், ஏனைய பெரிய வர்த்தகத் தொழில் நிலையங்களும் தத்தம் தலைமை அலுவலகங்களுடனும், தலைமை நிலையங்களுடனும் நேரடியாக நடத்தும் இயக்கங் களைப் பிரதிபலிக்கின்றன. அடைக்கப்படாத மீதிகள் காலத்திற்குக் காலம் வங்கிகள் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன.

## அட்டவணை II ஏ-3

## நிதியீட்ட வடிவத்தில் 1960, 1961, 1962க்கான இலங்கையின் சென்மதி நிலுவைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | 1961 | 1962(அ) |
|---|---|---|---|
| பொருட்கள் .. .. .. .. | —209·9 | — 86·4 | —132·8 |
| சேவைகள் .. .. .. .. | — 32·2 | — 18·3 | — 2·1 |
| தனிப்பட்டோர் அனுப்பியவைகளும், குடிபெயர்வோர் மாற்றங்களும் (நிகர) .. .. | — 30·9 | — 29·7 | — 29·8 |
| தனிப்பட்டோர் நிகர மூலதனக் கணக்கு | | | |
| (அ) நேரடி முதலீடு .. .. .. | + 2·2 | — 7·8 | — 0·7 |
| (ஆ) விசேட கணக்கு நிலுவைகளில் ஏற்பட்ட நிகர மாற்றங்கள் .. .. | — 7·5 | + 13·9 | — 5·3 |
| திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் .. .. | — 2·8 | — 4·9 | — 6·2 |
| கொடுக்கப்பட்ட தங்கம்: | | | |
| சர்வதேச நாணய நிதிக்குக் கட்டியது .. .. | — | — | — |
| சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்குக் கட்டியது .. | — | — 0·9 | — 0·2 |
| சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்குக் கட்டியது .. .. .. .. | — | — 1·4 | — |
| மொத்த நிதியீட்டக்குறை .. .. .. | —281·1 | —135·5 | —177·1 |
| நிதியீட்டக்கணக்கு | | | |
| அ. அரசகரும மூலதனமும் வங்கி மூலதனமும்* | | | |
| 1. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் .. .. .. .. | +192·7 | + 9·6 | + 27·8 |
| (அ) அந்நிய உடைமைகள் .. .. .. | +207·3 | — 0·6 | + 34·7 |
| (ஆ) கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் ''இலங்கைக்கு வரவேண்டியவை'' .. | — 14·6 | + 10·2 | — 6·9 |
| 2. மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. .. | + 6·0 | +104·9 | + 94·2 |
| (அ) கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் ''இலங்கை கொடுக்கவேண்டியவை'' .. | — 0·1 | + 21·3 | — 11·6 |
| (ஆ) நீண்டகாலப் பொறுப்புக்கள்[1] .. .. | + 26·3 | + 23·8 | — 45·9 |
| (இ) சர்வதேச நாணய நிதியில் பெற்றது .. | — | + 53·8 | + 53·8 |
| (ஈ) ஏனையவை[2] .. .. .. | — 20·2 | + 6·0 | + 6·1 |
| ஆ. அரசகரும நன்கொடைகள்[3] .. .. | + 52·5 | + 40·6 | + 40·7 |
| இ. பிழைகளும் தவறுகளும் .. .. | + 29·9 | — 19·6 | + 14·4 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மகா வங்கி.

* நிதியீட்டக்கணக்கில் உள்ள சக அடையாளம் சொத்துக்களின் வீழ்ச்சியையும் அல்லது பொறுப்புக்களின் உயர்ச்சியையும், சக அடையாளம் சொத்துக்களின் உயர்ச்சியையும் அல்லது பொறுப்புக்களின் வீழ்ச்சியையும் குறிக்கின்றன.

1. சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றவற்றையும், கனடாவிலிருந்து பெற்ற கடன்கள், ஏனைய கடன்கள் முதலியவற்றையுமே முற்றாக கொண்டுள்ளது.
2. மகாவங்கி வர்த்தக வங்கிகள் முதலியவற்றின் இலங்கையில் வதிவற்ற கணக்கு நிலுவைகள் அமெரிக்க பொதுச்சனசட்டம் 480ன் கீழ் பெற்ற உதவியின் பயனாக எழுந்த உள்நாட்டு நிதிகளின் நிலுவை, அயல்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களின் நிலுவைகள் முதலியனவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கும்.
3. இலங்கை அரசாங்கம் பெற்ற கொடைகளைத்தான் அரசகரும நன்கொடைகள் என்பது குறிக்கும். பண்டங்கள் வடிவத்திலேயே இவ்வகைக்கொடைகள் பிரதானமாகப் பெறப்படுகின்றன. இக்கொடைகளில் பிரதானமானவை ''கெயர்'' அமெரிக்க உதவியின் கீழ் பெற்ற பாலும், கோதுமை மாவும், கனடா அவுஸ்திரேலியா முதலிய நாடுகளில் இருந்து கிடைக்கும் கொழும்புத்திட்ட உதவியுமாகும்.

### நிதியீட்டக்கணக்கு

1961ம் ஆண்டினது நிதியீட்டக்குறையிலும் பார்க்க 1962ம் ஆண்டினது நிதியீட்டக்குறை ரூ. 416 லட்சத்தால் உயர்ந்து விளங்கியது. இது நடைமுறைக்கணக்கு நிலுவையில் ஏற்பட்ட சீர்குலைவைப் பிரதிபலிக்கின்றது. 1962ம் ஆண்டினது நிதியீட்டக்குறை முறை 1961ம் ஆண்டின் முறை அமைப்பையே பின்பற்றியுள்ளது. குறையின் பெரும் பாகத்திற்கு இலங்கையின் வெளிநாட்டு பொறுப்புக்களை அதிகரித்ததன் மூலமாகவே நிதியீட்டப்

பட்டது. இதனுல் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஒரு ஒப்பியல்பான சிறு வீழ்ச்சியே ஏற்பட்டது. இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற் பட்ட அதிகரிப்பானது பிரதானமாக சர்வதேச நாணய நிதியிலிருந்து ரூ. 538 லட்சம் ரூபாய்களைக் கொண்ட அந்நிய செலாவணியை, 1962ம் ஆண்டு மாசி மாதம் கொள்வனவு செய்ததினுலேயே ஏற்பட்டது. சர்வதேச புனருத் தாரண அபிவிருத்தி வங்கி, அபிவிருத்திக் கடன்நிதி, பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ரூஷ்யா போன்றவற்றிடமிருந்து பெறப்பட்ட நெடுங் கால கடன்களினது மொத்தத் தொகை ரூ. 459 லட்சம் ஆகும். மற்றப் புறத்தில் இலங்கையின் குறுகியகாலப் பொறுப்புக்களில் 1961ம் ஆண்டு ஏற் பட்ட அதிகரிப்பில் (ரூ. 213 லட்சம்) பெரும்பாகம் (ரூ. 116 லட்சம்) 1962 இற் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

1962ம் ஆண்டு முடிவில் வெளிநின்ற இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புகள் கீழ்வரும் அட்டவணையிலே சுருக்கித் தரப்பட்டிருக்கின்றன.

**அட்டவணை II ஏ-4**

**இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்[1]**

இலட்சம் ரூபாய்களில்

| பொறுப்புக்கள் | வெளிநின்ற நிலுவைகள் 1961 | வெளிநின்ற நிலுவைகள் 1962 | மாற்றம் |
|---|---|---|---|
| 1. கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் ''இலங்கை கொடுக்க வேண்டியவை'' .. .. .. | 22·1 | 10·5 | — 11·6 |
| 2. ச.நா. நிதியிடமிருந்து பெறப்பட்டவை .. .. | 53·8 | 107·6 | + 53·8 |
| 3. ஸ்டேர்லிங் கடன்கள். .. .. .. .. | 167·9 | 167·9 | — |
| 4. ஏனைய பெறப்பட்டதும் வெளிநின்றனவுமான கடன்கள் | 148·2 | 187·9 | + 39·7 |
| மொத்தம் .. .. .. .. | 392·0 | 473·9 | + 81·9 |

**பிரதேச அமைப்பு**

நடைமுறைக்கணக்கின் பேரில் உள்ள இலங்கையின் சென்மதிநிலுவை முந்தைய ஆண்டுகளிற் காணப்பட்ட அமைப்பைப் பின்பற்றி, டொலர் பிரதேசத்துடன் மிகையையும், ஏனைய பிரதேசங்களுடன் குறையையும் காட்டிற்று. டொலர் பிரதேசத்துடன் உள்ள மிகையான 1997 லட்சமானது 1961ம் ஆண்டினது மிகையிலும் சிறிது உயர்ந்ததாக இருந்தது. ஸ்டேர்லிங் பிரதேசத்துடன் உள்ள குறையாகிய ரூ. 2537 லட்சம் 1961ம் ஆண்டிற் குரிய குறையாகிய 2288 லட்சத்திலும் உயர்ந்ததாக இருப்பினும், முந்தைய ஐந்து வருடங்களின் பதியப்பட்ட சராசரி வருடக்குறையாகிய ரூ. 2900 லட்சத்திலும் தாழ்ந்ததாகவே இருந்தது. ஸ்டேர்லிங் பிரதேசத்திற்குள்ளே பிரிட்டனுடன் ஏற்பட்ட குறை 1961லிருந்து 180 லட்சத்தால் கூடியிருக்கையில், இந்தியாவுடனும், பாகிஸ்தானுடனும் ஏற்பட்ட குறை 1961லிருந்து ரூ. 54.3 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. ஏனைய ஸ்டேர்லிங் பிரதேச நாடுகளுடன், பிர தானமாக பர்மா, அவுஸ்திரேலியாவுடன் 1961ம் ஆண்டில் ஏற்பட்ட மிகையா னது 1962ம் வருடத்தில் ரூ. 431 லட்சக் குறையாக மாறியது. ஏனைய ஸ்டேர்லிங்

1. வெளிநாட்டு செலாவணியில் கொடுபடவேண்டிய பொறுப்புக்கள்; பொதுசனச் சட்டம் 480இன் பயனுக எழுந்த நிதிகளின் நிலுவைகள் வர்த்தக வங்கிகளிலிருக்கும் வதிவற்ற கணக்கு நிலுவைகள் ஆனவற்றை உள்ளடக்குவனவல்ல. இத்தகைய நிலுவைகள் 1962இல் ரூ. 69 லட்சத்தால் ரூ. 775 லட்சத்திலிருந்து ரூ. 844 லட்சமாக அதிகரித் துள்ளன.

பிரதேசத்து நடைமுறைக் கணக்கு நிலைமையில் ஏற்பட்ட சீர்குலைவு, இப்பிரதேசத்திற்குரிய இறக்குமதிக் கொடுப்பனவுகள் கூடியதாலும், இப்பிரதேசத்திலிருந்து ஏற்றுமதி வருமதிகள் குறைவுற்றதாலுமேயாம். டொலர் ஸ்டேர்லிங் பிரதேசங்களில் இல்லாத நாடுகளுடன் உள்ள குறை 1961க்குரிய ரூ. 731 லட்சத்திலிருந்து 1962ல் ரூ. 673 லட்சமாகத் தாழ்ந்தது. ஐரோப்பிய பொருளாதார கூட்டுறவுத்தாபனத்து ஐரோப்பியக் குழு* நாடுகளுடனுள்ள குறை ரூ. 122 லட்சத்தால் உயர்ந்தது. ஐரோப்பிய பொருளாதார கூட்டுறவுத்தாபனத்தைச் சேராத நாடுகளாகிய, முக்கியமாக சீனு, ஜப்பான், கிழக்கு ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளுடன் உள்ள குறை முக்கியமாக இருபுடைவர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பட்ட உயர்ந்த ஏற்றுமதி வருமதிகள் காரணமாக, இறக்குமதிக் கொடுப்பனவுகள் கூடியும் ரூ. 155 லட்சத்தால் தாழ்ந்தது.

### அட்டவணை II ஏ-5

நாணயப்பிரதேசங்களின்படி 1961, 1962க்கான நடைமுறைக்கணக்கு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961 | | | 1962 | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | நிகர | வரவு | பற்று | நிகர |
| 1. டொலர் பிரதேசம் .. | 312·0 | 115·2 | +196·8 | 312·0 | 112·3 | +199·7 |
| 2. ஸ்டேர்லிங் பிரதேசம் .. | 1,037·5 | 1,255·0 | —217·5 | 1,048·1 | 1,301·8 | —253·7 |
| (i) பிரித்தானியா .. | 636·6 | 676·7 | — 40·1 | 642·4 | 700·5 | — 58·1 |
| (ii) இந்தியாவும் பாகிஸ்தானும் .. | 74·6 | 281·4 | —206·8 | 103·7 | 256·2 | —152·5 |
| (iii) ஏனையவை .. | 326·3 | 296·9 | + 29·4 | 302·0 | 345·1 | — 43·1 |
| 3. ஸ்டேர்லிங் டொலர் பிரதேசங்கள் அல்லாத ஏனைய பிரதேசங்கள் .. | 628·3 | 701·4 | — 73·1 | 682·7 | 752·7 | — 70·0 |
| (i) ஐரோப்பாக் கண்ட பொருளாதாரக் கூட்டுறவுத்தாபனம் .. | 181·8 | 216·1 | — 34·3 | 183·3 | 229·8 | — 46·5 |
| (ii) ஏனையவை .. | 446·5 | 485·3 | — 38·8 | 499·4 | 522·9 | — 23·5 |
| மொத்தம் .. | 1,977·8 | 2,071·6 | — 93·8 | 2,042·8 | 2,166·8 | —124·0 |

### அந்நிய ஒதுக்கு நிதிகள்

1961ல் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குநிதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூ. 96 லட்சங்களாக இருக்க, 1962ல் இவ்வீழ்ச்சி ரூ. 278 லட்சங்களாக இருந்தது. இது சென்மதிநிலுவை நிலைமையில் ஏற்பட்ட ஓர் சீர்குலைவையே பிரதிபலிக்கின்றது. ஆயினும் இந்த ரூ. 278 லட்சம் கொண்ட வீழ்ச்சி 1961க்கு முந்திய நான்கு வருடங்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளிலும் கணிசமான அளவிற் குறைவாக இருக்கின்றது. மேலும் 1962ம் ஆண்டுப் பின்பாகத்தில் கடுமையான விதத்தில் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளினதும் உயர்த்தப்பட்ட இறக்குமதி வரிகளினதும் விளைவாக, அவ்வருட கடைக்கால் மாதத்தில், வெளிநாட்டுச் சொத்துக்களில், சிறிதாக இருப்பினும், ஒரு ஏற்றம் ஏற்பட்டது.

*ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுறவுத்தாபனத்து ஐரோப்பியக்குழு நாடுகளாவன, மேற்கு ஐரோப்பிய நாடுகள், துருக்கி கிரேக்க நாடுகள், ஆகியனவாகும்.

1961ம் ஆண்டிற் போல் ஒதுக்கு நிதிகளில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சி வேகம் நாட்டினது குறுகிய கால, நீண்டகால பொறுப்புக்களின் அதிகரிப் பாலேயே மட்டுப்படுத்தப்பட்டது. இப்பொறுப்புக்களின் முக்கிய அம்சமாக சர்வதேச நாணய நிதியிலிருந்து இரண்டாம் முறை எடுக்கப்பட்ட ரூ. 538 லட்சம் விளங்குகிறது. மேற்கூறிய பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் கிட்டத்தட்ட முழுவதும், 1962ம் ஆண்டின் முதல் மூன்று காற்பகுதிகளில் ஏற்பட்டது. ஆகையால் இவ்வாண்டின் இறுதிக்காற்பகுதியில் ஒதுக்குநிதி களில் ஏற்பட்ட சிறு அதிகரிப்பு, சென்மதி நிலுவை நிலவரத்தில் இப்பகுதி யில் ஏற்பட்ட அடிப்படைச் சீர்திருத்தத்தையே பிரதிபலிக்கின்றதெனலாம்.

1962ம் ஆண்டு கார்த்திகை, மார்கழி மாதங்களில் வெளிநாட்டுச் சொத்துக்களில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டிருப்பினும், 1962ம் ஆண்டு முடிவில் இவ்வெளிநாட்டுச் சொத்துக்கள் அவ்வாண்டின் ஆரம்பகால நிலையிலிருந்து ரூ. 278 லட்சத்தால் தாழ்ந்து விளங்கின. எனவே 1961ம் ஆண்டு அறிக் கையில் இதுபற்றி கொடுக்கப்பட்டதான கீழ்வரும் குறிப்புகள் இவ்வருடத் திற்கும் ஏற்றனவாகும். "............. வெளிநாட்டு ஒதுக்குநிதி நிலைமை (வருடமுடிவில்) பலகாரணங்களுக்காக திருப்திகரமானது எனக் கருதமுடியாது. ஏனெனில் முதலாவதாக 1961ம் ஆண்டில் அதிகரித்த அந்நிய பொறுப்புக்கள் ஏற்பட்டமை, இரண்டாவதாக ஏற்றுமதி விலை களில் தேக்கம் ஏற்படக்கூடிய தன்மை கடந்த சில மாதங்களில் அதி கரித்தமை, மூன்றாவதாக பொருளாதார அபிவிருத்தி ஆக்க வேலைகள் தீவிரமடையும்பொழுது, குறிப்பாக மூலதனப்பொருட்களுக்காக உள்ள கேள்வி அதிகரித்தமை; ஆகவே உள்நாட்டு பணவிரிவைத்தடுக்கும் கடுமை யான கட்டுப்பாடுகளுடன், இறக்குமதிகள் மற்றும் ஏனைய அந்நிய கொடுப் பனவுகளையும் மட்டுப்படுத்தும் கொள்கை, தொடர்ந்தும் அவசிய மாகின்றது."